**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.58/2022 தேதி-28.01.2025

(P.W.1) - ரமணி

குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கை நான் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழிப்பாதை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வேறு பரிகாரம் ஏதாவது கேட்டுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் 2 மற்றும் 3 ஆம் வாதிகள் என்னுடைய மகள்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 2 மற்றும் 3 வாதிகளை ஏன் இந்த வழக்கில் வாதியாக சேர்த்துள்ளேன் என்றால் அவர்களுக்கும் வழக்கு சொத்தில் உரிமையுள்ளதால் வாதியாக சேர்த்துள்ளேன். வழக்கில் எத்தனை பட்டிகை சொத்து உள்ளது என்றால் 3 பட்டிகை சொத்துக்கள் உள்ளது. பட்டிகை சொத்தின் விவரங்கள் தெரியுமா என்றால் ஏ மற்றும் பி-பட்டிகை சொத்து என்னுடைய சொத்தாகும். சி-பட்டிகை சொத்து என் பிள்ளைகளின் பெயரில் உள்ள சொத்தாகும். வழக்கு ஏ-பட்டிகை சொத்தின் அளவு என்னவென்றால் மொத்தம் 3 சென்ட் 144 சதுர லிங்ஸ் ஆகும். பி-பட்டிகை சொத்து யாருக்கு உரிமைப்பட்டது என்றால் சுந்தரம் என்பவருக்கு உரிமைப்பட்ட சொத்தாகும். அவரோ அவர் வாரிசுதாரர்களோ இவ்வழக்கின் தரப்பினரா என்றால் இல்லை.

2. 3-வாதிகளுக்கும் சேர்த்து எத்தனை சென்ட் சொத்து உள்ளது என்றால் 4 1/2 சென்ட் சொத்தாகும். மேற்சொன்ன 4 1/2 சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்பதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் உள்ள 1 ஏக்கர் 26 சென்ட் உள்ள கோட்டைககம் புரையிடத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன 4 1/2 சென்ட் சொத்திற்கான ஆவணம் எந்த ஆவணம் என்றால் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களாகும். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்களில் எந்த ஆவணத்தில் 4 1/2 சென்ட் சொத்து எனக்கு உரிமைப்பட்டது என்று சொல்லியுள்ளது என்றால் தனியாக ஆவணமில்லை. வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ.5 ஆவணங்கள் மொத்தமாக 4 1/2 சென்ட் சொத்து எனக்கு உரிமைப்பட்டதாகும். வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீட்டில் 25 வருடங்களாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான்.

(P.W.1) - ரமணி

<u>குறுக்கு விசாரணை</u>

3. மேற்சொன்ன 25 வருடங்களுக்கு முன்னர் சொத்தை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்சொன்ன 1 ஏக்கர் 26 செண்ட் சொத்தில் சுமார் 25 வீடுகளுக்குமேல் குடித்தனம் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 1 ஏக்கர் 26 செண்ட் சொத்தில்உள்ள வீடுகளை சுற்றி காம்பவுண்ட் சுவர் இல்லை என்றாலும் அங்கு வசிக்கும் அனைவரும் பரஸ்பரமாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. 2004-ஆம் வருடம் நான் என் வீட்டிற்கு காம்பவுண்ட் கட்டிவிட்டேன். மற்ற வீடுகளும் அவரவர் வீடுகளை சுற்றி காம்பவுண்ட் சுவர் எழுப்பிவிட்டார்கள்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒப்பம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல்,
பத்மனாபபுரம்.